# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.108/2024**

Deposition of Witness of PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான்சன் பால் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 10th மார்ச் 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.06.2023 அன்று ஓய்வு பெற்று தற்போது ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24.01.2022 ம் தேதி இரவு 21.30 மணிக்கு மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் பணியில் இருந்துபோது ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்து 1. ஜெகதீஸ் 2.வெள்ளைச்சாமி, 3. கார்த்திக்பிரபு, 4. நவீன்குமார் ஆகியோர்களின் RTA இன்டிமேசனின் பேரில் கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று விபத்து பதிவேட்டினை பெற்று பார்த்தபோது காயம்பட்ட ஜெகதீஸ் என்பவர் மேல்சிகிச்சைக்காக ஈரோடு SK மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜெகதீஸ் என்பவரை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தின் பேரில் காவல்நிலையம் வந்து 23.45 மணிக்கு குற்ற எண்.28/2022 இதச பிரிவு 279, 337, 304(A) இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் வாக்குமூலத்தின் அசலையும் இணைத்து ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மேல் விசாரணைக்காக அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக மொடக்குறிச்சி காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளர் திருமதி.தெய்வராணி

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.03.10 11:38:17 +0530

என்பவரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக என்னை காவல்நிலைய ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை:**

விபத்து நடந்த இடமான சாலை ஒருவழிப்பாதை என்றால் தவறு. நான் அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்று பார்வையிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை எந்த தேதியன்று காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் என்றால் 24.01.2022ம் தேதி பொறுப்பு ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். வழக்கில் காயம்பட்டவர் யார் என்றும், இறந்த நபர் யாரென்று எனக்கு தெரியுமா என்றால் இன்டிமேசன் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். விபத்தில் யார் யார் பாதிக்கப்பட்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. விபத்து யாரால் நடந்தது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:38:23 +0530

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.108/2024**

Deposition of Witness of PW7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | விநாயக் | Calling | : | |
| Father/Husband's Name | : | | Age | : | |
| Village | : | | | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 10th மார்ச் 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கோயமுத்தூரில் வசித்து கொண்டு நிறுவனம் வைத்து பணிபுரிந்து வருகிறேன். 24.01.2022 ம் தேதி மாலை 6.00 முதல் 7.00 மணியளவில் என் பாட்டி வீடான நாவிதன்காட்டில் இருந்த போது வெளியே பெரிய சத்தம் கேட்டது நான் வந்து பார்த்தபோது 3 பைக்கில் வந்த 4,5 நபர்கள் கீழே விழுந்து கிடந்தார்கள். 2,3 நபர்களுக்கு இரத்தம் நிறைய வந்து இருந்தது. 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் அடிபட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மறுநாள் 25.01.2022ம் தேதி காலை 6.00 மணியளவில் நான் என் பாட்டி வீட்டில் இருந்தபோது முந்தைய நாள் நடந்த விபத்து சம்பந்தமாக மொடக்குறிச்சி போலீஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும், பழனிசாமி என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

என் பாட்டி வீடானது சாலை ஒட்டினாற்போல் உள்ளது என்றால் சரிதான். என் பாட்டி வீட்டில் சாலையை பார்வையிடும் படியாக CCTV கேமரா இருந்தது

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:38:28 +0530

என்றால் இருந்தது, ஆனால் அது அச்சமயம் செயல்படவில்லை. விபத்தில் அடிபட்ட சந்திரசேகரும், அவரது மகனும் எனக்கு உறவினர்கள் என்றால் அவர்கள் யாரென்று எனக்கு தெரியாது. சத்தம் கேட்டு வந்த பார்த்தபோது எந்த வாகனம் எந்த வாகனத்துடன் மோதி இருந்தது என்று தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனமான 2 இருசக்கர வாகனம் மற்றும் ஒரு ஜென் மாருதி கார் என்றால் 2,3 வாகனங்கள் இருந்தன, கார் இருந்தது பற்றி தெரியாது.

2. அடுத்த நாளான 25.01.2022ம் தேதி காவல்துறை விபத்து சம்பந்தப்பட்ட இடத்தை பார்வையிட்ட போது நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவைகளில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை, சம்பவ இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். விபத்து நடந்த இடத்திற்கும், நான் இருந்த இடத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 50 மீட்டர் இருக்கும். விபத்து நடந்த பகுதியானது இருட்டான பகுதி என்றால் மாலை நேரம் என்பதால் கொஞ்சம் இருட்டு தான். விபத்து நடந்த பகுதி இருட்டான பகுதி என்பதால் விபத்தை தெளிவாக பார்க்கமுடியாது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை பார்க்கவில்லை என்றும், சம்பவ நாளன்று எனது பாட்டில் இல்லை என்றும், போலீஸார் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. வரைபடம் வரைந்த காவலர் பெயர் என்ன என்றால் அதுபற்றி தெரியாது. காவலர் பெயர் சண்முகம் என்றால் அதுபற்றி சரியாக தெரியவில்லை. சம்பவம் நடந்த தேதியன்று வரைபடம் வரையும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், வரைபடம் வரைந்த காவலர் யாரென்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:38:33 +0530